# MARUDHAR KESARI JAIN COLLEGE FOR WOMEN (AUTONOMOUS)
# VANIYAMBADI

## PG & RESEARCH DEPARTMENT OF TAMIL

## II B.A., TAMIL – SEMESTER – 1V

## E-NOTES (STUDY MATERIAL

| |
|---|
| **C - Course - 2 நன்னூல்**<br>**Code : 23UTA42** |
| **Unit : 3 பொதுவியல்** |
| Learning Objectives :<br>**வினைச்சொற்கள் தொடர் அமைப்பில் பெயரெச்சங்களாகவும் வினையெச்சங்களாகவும் வினைமுற்றுகளாகவும் அமைவதை அறிந்து வைத்திருத்தல்** |
| **Coures Outcome:**<br>**மொழியின் வழு, வழுவின்மை ஆகியவற்றை உணர்ந்திருப்பர்** |

**Overview**

**பொதுவியல் என்பது முன்னர்க் கூறிய பெயர், வினைச் சொற்களுக்கும் பின்னர்க் கூறப் போகின்ற இடை, உரிச்சொற்களுக்கும் உரிய பொதுவான இலக்கணத்தைக் கூறும் இயல். ஆதலின் பொதுவியல் எனப் பெயர் பெற்றது. இது ஐந்து இயல்களின் நடுவாக அமைந்தது. முன் இரு இயல்களையும் பின் இரு இயல்களையும் அரிமா நோக்காகத் தழுவி நிற்கிறது. இவ்இயல் 68 நூற்பாக்களைக் கொண்டு விளங்குகிறது.**

அலகு - 3 பொதுவியல்

திணை, பால், இடம், காலம் ஆகியவற்றுக்குப் பொதுவான பெயர்களும் வினைகளும் உள. அவற்றை அடுத்து வரும் சிறப்பாகிய பெயர்வினைகள் பொதுத்தன்மையை நீக்கி ஒன்றுக்கு உரிமைப்படுத்தும்.

## தமிழில் பத்து வகை எச்சங்கள்

தமிழில் பத்து வகை எச்சங்கள் உள்ளன. அவை: பிரிநிலை எச்சம், வினை எச்சம், பெயர் எச்சம், ஒழியிசை எச்சம், எதிர்மறை எச்சம், உம்மை எச்சம், என எச்சம், சொல் எச்சம், குறிப்பு எச்சம் மற்றும் இசை எச்சம்.

- பிரிநிலை எச்சம்
- வினை எச்சம்
- பெயர் எச்சம்
- ஒழியிசை எச்சம்
- எதிர்மறை எச்சம்
- உம்மை எச்சம்
- என எச்சம்
- எஞ்சிய மூன்று எச்சங்கள

வினை யெச்சச் சொற்கள் தமக்குரிய வாய்பாட்டுப் பொருள்களில் நில்லாமல் வேறு வாய்பாட்டுப் பொருள்களில் நிற்கும் குறிப்பும் உடையவாம். ‘யானை ஒடித்து உண்டு எஞ்சிய கிளை’ என்பதில், உண்டு என்பது செய்து என்னும் வாய்பாட்டுப் பொருளை விட்டு ‘உண்ண‘ எனச் செய என்னும் வாய்பாட்டுப் பொருளாதலைக் காண்க

பிரிநிலை யெச்சம், வினையெச்சம், பெயரெச்சம், ஒழியிசையெச்சம், எதிர்மறை யெச்சம், உம்மை யெச்சம், என வெச்சம், சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் என எச்சம் பத்து வகைப்படும்.

1 பிரிநிலை எச்சம் இது ஏ ஓ என்னும் இடைச் சொல் பற்றியது. பிரிக்கும் சொல்லைச் சார்ந்த ஏ என்னும் இடைச் சொல் பிரிக்கப்படும் சொல்லோடு முடியுமாறு அமையும் இதில் எஞ்சியிருப்பது பிரிக்கப்படும் சொல். அதைக்கொண்டு முடிவது 'ஏ' என்னும் இடைச்சொல். 'அவனே கொண்டான்' என்பது 'பிறர் கொண்டிலர்' என்பதைக் கொண்டு முடிந்தது காண்க

2 வினையெச்சம் என்பது தெரிநிலையாகவோ குறிப்பாகவோ காலம் உணர்த்தும் வினையை எஞ்சி நிற்பது. உழுது வந்தான், கற்று வல்லன் ஆனான் என்பன காண்க. இவற்றுள் கற்று என்னும் வினையெச்சம் வல்லன் என்னும் குறிப்புவினையைக் கொண்டதாயினும் ஆக்கச் சொல் ஒன்றும் (ஆனான் என்பது) உடன் இருப்பது காண்க. குறிப்பு வினை ஆக்கச் சொல்லுடனேதான் வரும்.

3 பெயரெச்சம் பெயரொடு முடியும். 'உண்ட சாத்தன்

4 ஒழியிசையெச்சம் என்பது, ஒழியிசைப் பொருளில் வரும் இடைச் சொற்கள் (மன், தில், ஓ என்பன) வெளிப்படவாராது ஒழியும் பொருள்களை எஞ்சி நிற்பது. கூரியதோர் வாள்மன் என்பதில் 'மன்' என்பது வாள்கூரியதன்று அதாவது திட்பமின்று என்னும் ஒழிந்த பொருளை எஞ்சிநின்றது காண்க. பிறவும் அன்ன.

5 எதிர் மறையெச்சம் என்பது எதிர்மறைப் பொருள்தரும் சொற்களை எஞ்சி நிற்பது. எதிர் மறைப் பொருள் தரும் இடைச்சொற்கள ஏ, ஓ, உம் என்பன. யானே திருடினேன் என்பதில்

ஏ' என்பது இல்லை என்னும் எதிர் மறைப் பொருட் சொல்லை எஞ்சி நின்றது. இப்படிப் பிறவும் காண்க.

6 உம்மையெச்சம் என்பது இரண்டு சொற்களில் உம் வந்து ஒன்றை யொன்று எஞ்சி நிற்பதாம். அப்போது இரண்டற்கும் ஒரே வினைச் சொல்லே வரும். 'சாத்தனும் வந்தான் கொற்றனும் வந்தான்' என்பதில் சாத்தனும் என்பதன் உம்மை சாத்தனையும் எஞ்சி நிற்பதும் இரண்டும் வந்தான் என்னும் ஒரு வினையே முடிபாகக் கொள்வதும் காண்க.

எச்ச உம்மை வரவேண்டிய சொல் எச்ச உம்மையில்லாமல் செஞ்சொல்லாக வருமானால் அவ்வெச்சவும்மை கொண்டு முடியும் சொல்லில் உம்மை வந்து இறந்த காலத்துக்கு எதிர் காலமும் நிகழ்காலத்துக்கு எதிர் காலமுமாக மயங்கி வரவும் பெறும். 'கூழ்உண்டான் சோறும் உண்பான்', எனவும், 'கூழ் உண்கின்றான் சோறும் உண்பான்' எனவும் வருவது காண்க. கூழ் என்பது உம்மையின்றி வந்தது.

7 என் என்னும் எச்சம் வினையை எஞ்சி நிற்கும். 'கொள்எனக் கொடுத்தான்' என வரும்

8. 9. 10. சொல்லெச்சம், குறிப்பெச்சம், இசையெச்சம் ஆகிய மூன்றற்கும் முடிக்கும் சொல் அல்லது சொற்கள் இரா (43) எளினும் குறிப்பால் உணர்ந்து முடிக்கப்படும்.

முள் மரத்தைச் செடியாக இருக்கும்போதே களைந்து விடுக; இல்லையேல் மரமானபின் களையமுற்படின் களைவோர் கையைப் புண்படுத்தும்" (குறள்) என்பது, "பகையைத் தொடக்கத்திலேயே அழிக்க; இல்லையேல் அது வளர்ந்து உன்னை அழித்து விடும்" என்பதைக்குறிப்பால் உணர்த்துவது குறிப்பெச்சமாம். இசை என்பது சொல் என்னும் பொருள் தரும். இசையெச்சம் என்பது ஏதேனும் ஒரு சொல் எஞ்ச நிற்பது ஆகும்.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு (குறள். 1)

என்பதில் அது போல எனும் சொல் எஞ்சி நின்றது இசையெச்சமாம்.

சொல் எச்சம் என்பது 'சொல்' என்னும் சொல்லே எஞ்சி வருவதாம், என்றான் என்பதில் என்று 'சொன்னான்' எனப் பொருள் கொள்ளும் போது 'சொல்' என்பது எஞ்சி நின்றது காண்க.

(குறிப்பு: இசையெச்சம் சொல்லெச்சம் பற்றிய கருத்து வேறுபாடுகளை உரைகளிற் கண்டு தெளிக)

பத்துவகை எச்சங்களுள் வினை யெச்சமும் பெயர் எச்சமும் வினையியல் ஒழிபுகள். பிரிநிலை ஒழியிசை, எதிர்மறை, உம்மை, என என்பன இடையியல் ஒழிபுகள். சொல் குறிப்பு இசை என்பன பிற ஒழிபுகள்.

6. இடையியல் ஒழிபுகள் :

சொற்கள் பிறிதோர் சொல்லை வேறுபடுத்துதல் (விசேடித்தல்), வேறு படுத்தப்படுதல் (விசேடிக்கப்படுதல்) என இருவகையில் வரும். ஆனால் இடைச் சொல் என்பது பிறிதோர் சொல்லை வேறுபடுத்தவே வரும் வேற்றுமை யுருபுகள் தாம் சாரும் பெயர்ப் பொருளை வேறுபடுத்துவதைக் காண்க. (59)

உரிச்சொற்களில் சில வேறு படுத்தவும் வேறுபடுக்கப்படவும் வரும். உறு என்பது உறுபொருள் (மிக்க பொருள்) என வேறுபடுத்தவே வரும். குரு (நிறம்) என்பது குருமணி (நிறமுடையமணி) என வேறுபடுத்தவும் ‘விளங்குகுரு’ (விளங்கும் நிறம்) என வேறுபடுக்கப்படவும் வரும். (60) (இக்கருத்து உரியியல் ஒழிபாயினும் சூத்திரம் சுருங்க வேண்டிமேலதனுடன் சாரவைத்தார். தொல்காப்பியர்)

7. பிற ஒழிபுகள்

ஓர் எருத்தை நம்பி என்பதும் பசுவை இலக்குமி என்பதும் போல ஒரு திணைப் பெயரை ஒருதிணைப் பெயராக வழங்கும் சொற்களும், பூனையைக் குறிக்கும் பூசை என்பது திசைப் பெயர்; ;அதனால் வரும் பூசையான் என்பதுபோலும் சொற்களும், ‘யாற்றுட் செத்த எருமை யீர்த்தல் ஊர்க்குயவர்க்குக் கடன்’ என்பது போலத் தொடர்பில்லாத ஆனால் வழங்கி வருதல் எள்ள சொற்களும், பொருள் கருதி ஒரு திணையை வேறொரு திணைப் பொருளாகத் திரித்து வழங்கும் சொற்களும் (இதனைப் பிசி என்பர்.) இது பெரும் பாலும் சிலேடையில்

வரும்) மந்திரப் பொருளைக் குறித்த ஆனால் அப்பொருளுக்குரித்தல்லாத சொற்களும் ஆகிய அனைத்தும் வழங்கியவாறே வழங்கப்பெறும் இலக்கணம் கருதித் தவிர்க்கப்படா. (53)

காலவயப்பட்டு வழங்கவரும் புதிய சொற்கள் கடியப் படா (56)

சொற்களைத் தலை, இடை, கடையெனும் மூன்றிடத்தும் உள்ள எழுத்துகளைக் குறைத்து வழங்குதலும் உண்டு (57). உண்டெனினும் நிறை சொல்லாக இருக்கும் போதுதரும் பொருளையே தரும். (58) தாமரை, இல்லை, நீலம் என்பன மரை, இலை, நீல் எனக் குறைக்கப்படினும் அவ்வப் பொருளையே தருதலையறிக.

உடன் இணைந்து வராத மாறுபட்ட சொற்கள் உடன் இணைந்து வரும் இடமும் உண்டு; அறிக, சிறிது பெரிது என்பன உடன் இயையாதன; மாறுபட்டன. ஆனால் ‘இதை விட இது சிறிது பெரிது’ என்னுமிடத்தில் உடன் இணைந்தமையைக் காண்க. (62)

சிலசொற்றொடர்கள் சொற்பொருளை யுணர்த்தால் குறிப்பால் வேறு பொருள் உணரவும் நிற்கும். செஞ்செவி என்றால் பொன்னும் மணியும் அணியும் செவி எனப்பட்டு அச்செவியினையுடையாரது செல்வச் செழிப்பைக் குறிப்பால் உணர்த்துவதைக் காணலாம். (63)

செய்யுளில் முன்னிலையொருமை முன்னிலைப் பன்மை வினை கொள்ளுதல் உண்டு. அது ஆற்றுப்படைச் செய்யுளில் ஆம். கூத்தராற்றுப்படையில், ‘தலைவ’ என விளித்தவிளி (மலை.50) (முன்னிலையைச் சுட்டிய சொல்) ‘பெறுகுவிர்’ என்ற பன்மையொடு (மலை. 157) முடிந்தது காணலாம்.

புறனடை

சொல்லதிகாரத்துள், உலகவழக்கினும் செய்யுள்வழக்கினும் பொருள் பெறச் சொல்லப்பட்ட சொற்களையெல்லாம் பலவேறு செய்கையுடைய பழைய இலக்கண நூல் நெறி யானே தவறு படாது வேறுபடுத்தி உணருமாற்றான் பிரித்துப் பொருத்திக் காட்டுக.

வழு

வழு என்பது பிழையைக் குறிக்கும் சொல்லாகும்.

வழா நிலை

பிழையின்றி எழுதவேண்டும் என்று வலியுறுத்துவது வழா நிலை ஆகும்.

வழு அமைதி

பிழையிருந்தாலும் ஒரு காரணம் கருதி ஏற்றுக்கொள்வது வழு அமைதி ஆகும். கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை உற்று நோக்குக.

அம்மா வந்தது

நாளை வந்தான்

குயில் கத்தும்

- முதல் எடுத்துக்காட்டில்,

அம்மா என்பது உயர்திணைச் சொல்; வந்தது என்பது அஃறிணை முடிவு. இவ்வாறு உயர்திணையோடு அஃறிணையைச் சேர்த்திருப்பது வழு ஆகும்.

- இரண்டாம் எடுத்துக்காட்டில்,

நாளை என்பது எதிர்காலச் சொல். வந்தான் என்பது இறந்தகால முடிவு. இவ்வாறு எதிர்காலத்தையும், இறந்தகாலத்தையும் சேர்த்திருப்பது வழு ஆகும்.

- மூன்றாம் எடுத்துக்காட்டில்,

குயில் ஓசையைக் கத்தும் என்ற சொல்லால் குறிப்பிட்டிருப்பது வழு ஆகும்.

இங்ஙனம் தவறாக (வழு) அமைந்த மூன்று எடுத்துக்காட்டுகளையும் கீழ்க்காணுமாறு வழு நீக்கி வழங்க வேண்டும்.

அம்மா வந்தாள்

நாளை வருவான்

குயில் கூவும்

வழுவகை

• முதல் எடுத்துக்காட்டில்,

உயர்திணை, அஃறிணைக் கலப்பு ஏற்பட்டதால் அதனைத் திணை வழு என்பர்.

• இரண்டாம் எடுத்துக்காட்டில்,

எதிர்காலமும் நிகழ்காலமும் கலந்திருப்பதால் அதனைக் கால வழு என்பர்.

• மூன்றாம் எடுத்துக்காட்டில்,

கூவும் என்னும் மரபுச் சொல்லுக்குப் பதிலாகக் கத்தும் என்று இருப்பதால் அது மரபு வழு ஆகும்.

இவ்வாறே, மேலும் பல வழுக்கள் உண்டு. இலக்கண நூலார் அவற்றை ஏழாக வகையாக்கி உள்ளனர். அவற்றை எடுத்துக்காட்டுகளுடன் கீழ்க்காணும் பட்டியல் தெளிவாக்கும்.

| வழுவான சொல் | திருத்தம் | வகை |
|---|---|---|
| அரசன் வந்தது. | அரசன் வந்தான். | திணை வழு |
| செல்வி வந்தான். | செல்வி வந்தாள். | பால் வழு |
| நான் வந்தான். | நான் வந்தேன். | இட வழு |
| நேற்று வருவான் | நேற்று வந்தேன். | கால வழு |
| ஒருவிரலைக் காட்டி | இருவிரல்களைக் காட்டியே | வினா |

| | | |
|---|---|---|
| இது சிறிதா? பெரிதா? என்பது | அவ்வாறு வினவ வேண்டும். | வழு |
| ஊர் வந்ததா? என்றால் தேர் வந்தது என்பது | ஊர் வந்தது அல்லது ஊர் வரவில்லை என்பதே உரிய விடை ஆகும். | விடை வழு |
| மான் குட்டி | மான் கன்று | மரபு வழு |

வழு அமைதி

வழு என்பது பிழையைக் குறிக்கும் என்பதை அறிந்தோம். அவ்வாறு அமையும் இலக்கணப் பிழைகளைச் சில காரணங்களுக்காக ஏற்றுக் கொள்வதை வழுஅமைதி என்பர். கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை நோக்குக.

| வழு அமைதியாக அமையும் சில எடுத்துக்காட்டுகள் | காரணம் |
|---|---|
| ஒருவர் தன் வீட்டிலிருக்கும் பசுவை என் அம்மை வந்தாள் என்பது | மகிழ்ச்சி |
| உண்டு முடிக்காத போதே, உண்டேன், உண்டேன் என்பது | விரைவு |
| தேர்வு எழுதும் போதே யான் வென்றேன் என்பது | உறுதி |

குறிப்பும் வெளிப்படையும்

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளைக் கூர்ந்து நோக்குக.

தலைக்கு நூறு ரூபாய் கொடுத்தான். தலையில் சுமந்து சென்றான்.

முதல் எடுத்துக்காட்டில் தலை என்பது உடல் உறுப்பாகிய தலையையே குறிக்கிறது.

இதில் பொருள் வெளிப்படையாக அமைந்துள்ளது.

இரண்டாம் எடுத்துக்காட்டில் தலை என்பது உடல் உறுப்பைக் குறிக்கவில்லை.

மாறாக, தலையை உடைய ஒரு ஆளைக் குறிக்கிறது.

இவ்வாறு ஒரு சொல் குறிப்பால் வேறொரு பொருளை உணர்த்துவதே இலக்கணத்தில் குறிப்புச் சொல் என்பர்.

ஒன்றொழி பொதுச்சொல்

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை உற்று நோக்குக.

ஆயிரம் மக்கள் குழந்தை பெற்றனர். ஆயிரம் மக்கள் போரிட்டனர்.

இம் மாடு வயலில் உழும். இம் மாடு பால் கறக்கும்.

முதல் வரிசையில் இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் மக்கள் என்னும் பொதுச்சொல் இடம் பெற்றுள்ளது. போரிட்டனர் என்பதால் மக்கள் என்பது பெண்களை நீக்கி ஆண்களைக் குறித்தது. குழந்தை பெற்றனர் என்பதால் மக்கள் என்பது ஆண்களை நீக்கிப் பெண்களைக் குறித்தது.

இரண்டாம் வரிசையில் இரண்டு எடுத்துக்காட்டுகளிலும் மாடு என்னும் பொதுச்சொல் இடம்பெற்றுள்ளது. பால் கறக்கும் என்பதால் மாடு என்பது காளையை நீக்கிப் பசுவைக் குறித்தது. வயலில் உழும் என்பதால் மாடு என்பது பசுவை நீக்கிக் காளையைக் குறித்தது.

இவ்வாறு ஒரு பொதுச்சொல் ஒன்றை ஒழித்து வேறொன்றைக் குறிப்பதையே ஒன்றொழி பொதுச்சொல் என்பர்.

அடுக்குத்தொடர் - இரட்டைக்கிளவி

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை உற்று நோக்குக.

| | |
|---|---|
| மன்னரைக் கண்ட மக்கள் வாழ்க வாழ்க என்று | புயல் அடித்ததால் மரம் மடமட என முரிந்தது. |

| | |
|---|---|
| வாழ்த்தினர். | |

எடுத்துக்காட்டுகள் இரண்டிலும் இரட்டைச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

முதல் எடுத்துக்காட்டில் இடம்பெற்ற வாழ்க வாழ்க என்னும் இரட்டைச் சொல்லைப் பிரித்தாலும் பொருள் தரும்.

இரண்டாம் எடுத்துக்காட்டில் இடம்பெற்ற மடமட என்னும் இரட்டைச் சொல்லைப் பிரித்தால் பொருள் ஏதும் தராது.

பிரித்தாலும் பொருள்தரும் இரட்டைச் சொற்களை அடுக்குத் தொடர் என்பர்.

பிரித்தால் பொருள்தராத இரட்டைச் சொற்களை இரட்டைக் கிளவி என்பர்.

ஒருபொருட் பன்மொழி

கீழ்க்காணும் எடுத்துக்காட்டுகளை நோக்குக.

ஓங்கிஉயர்ந்த மாமலை

நீண்டநெடிய பேராறு

இவ்வெடுத்துக்காட்டுகளில் மலை, ஆறு என்பனவே பொருள்கள் ஆகும். அவற்றின் உயரத்தையும், நீளத்தையும் குறிக்க ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் இடம்பெற்றள்ளன.

ஓங்கி - உயர்ந்த - மா என்னும் மூன்றும் மலையின் உயரத்திற்கு அமைந்த பல சொற்களாகும்.

நீண்ட - நெடிய - பெரிய என்னும் மூன்றும் ஆற்றின் நீளத்திற்கு அமைந்த பல சொற்களாகும்.

இவ்வாறு ஒரு பொருளுக்கே பல சொற்கள் அமைவதையே இலக்கணத்தில் ஒருபொருட் பன்மொழி என்பர்.

வினா வகை

ஒருவர் மற்றவரைப் பார்த்து ஒரு செய்தியைப் பற்றிக் கேட்பதையே வினா என்பர். அவ்வாறு, வினாக் கேட்பதில் பல வகைகளை இலக்கணத்தில் வகுத்துள்ளனர்.

அதற்கான விளக்கங்களைக் கீழ்க்காணும் அட்டவணை இனிது விளக்குகிறது.

| வ. எண். | வினா வகை | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | அறி வினா | ஒரு பொருளைப் பற்றி தான் அறிந்திருந்து அது பிறருக்குத் தெரியுமா என அறிவதற்காக வினவுவது. | திருக்குறளை இயற்றியவர் யார்? என ஆசிரியர் மாணவனைக் கேட்பது. |
| 2. | அறியா வினா | தான் அறியாத ஒன்றை அறிந்து கொள்ளும் நோக்கில் வினவுவது. | தொலைக்காட்சியைக் கண்டுபிடித்தது யார்? என மாணவன் ஆசிரியரிடம் வினவுவது. |
| 3. | ஐய வினா | ஒரு பொருளைப் பற்றி இதுவா, அதுவா என்று ஐயப்பட்டு வினவுவது. | தொலைவில் தெரிவது மரமா? மனிதனா? |
| 4. | கொளல் வினா | ஒரு பொருளைப் பெற்றுக் கொள்வதற்காக வினவுவது. | வணிகரே உளுந்து உள்ளதா? |

| | | | |
|---|---|---|---|
| 5. | கொடை வினா | ஒரு பொருளைக் கொடுப்பதற்காக வினவுவது. | சிறுவனே ! உனக்கு ஆடை இல்லையா? |
| 6. | ஏவல் வினா | ஒரு செயலைச் செய்யுமாறு ஏவுவதற்காக வினவுவது. | பாடலை மனப்பாடம் செய்துவிட்டாயா? என்று ஆசிரியர் வினவுவது. (எழுதிக்காட்டும் படி ஏவுவதற்காக) |

விடை வகை

ஒருவர் கேட்ட வினாவிற்கு மற்றவர் கூறும் பதில் விடை எனப்பெறும்.

அவ்வாறு சொல்லப்பெறும் விடைகளை இலக்கணத்தில் பல வகைகளாக வகுத்துள்ளனர். அதற்கான விளக்கங்களைக் கீழ்க்காணும் அட்டவணை இனிது விளக்குகிறது.

| வ. எண். | விடை வகை | விளக்கம் | எடுத்துக்காட்டு |
|---|---|---|---|
| 1. | சுட்டு விடை | சுட்டிக் காட்டி விடை கூறுவது | உன்னுடைய வீடு எது என்ற வினாவிற்கு, என்னுடைய வீடு இது என்று விடை கூறுதல் |
| 2. | எதிர்மறை | மறுத்துக் கூறுவது | கடைக்குச் செல்வாயா? என்றால் செல்லமாட்டேன் என்பது. |

| | | | |
|---|---|---|---|
| 3. | நேர் விடை | உடன்பட்டுக் கூறுவது | கடைக்குச் செல்வாயா? என்றால் செல்வேன் என்பது . |
| 4. | ஏவல் விடை | வினா கேட்டவரை ஏவுவது போல விடை சொல்வது. | கடைக்குச் செல்வாயா? என்றால் நீயே செல் என்பது. |
| 5. | வினா எதிர் வினாதல் | வினா கேட்டவருக்கு வேறொரு வினாவின் மூலம் விடை கூறுதல் | கடைக்குச் சல்வாயா? என்றால் நீ செல்லக் கூடாதா? என்பது. |
| 6. | உற்றது உரைத்தல் | தனக்கு நிகழ்ந்த ஒன்றை விடையாகக் கூறுதல். | கடைக்குச் செல்வாயா? என்றால் கால் வலித்தது என்பது. |
| 7. | உறுவது கூறல் | தனக்கு நிகழப்போகும் ஒன்றை விடையாகக் கூறுதல். | கடைக்குச் செல்வாயா? என்றால் கால் வலிக்கும் என்பது. |
| 8. | இனமொழி விடை | கேட்ட வினாவிற்கு நேரடியாக விடை கூறாமல் அதற்கு இன | பயறு உள்ளதா? என்றால் உளுந்து உள்ளது என்பது. |

**பொருள்கோள் எட்டு வகைப்படும். அவையாவன**

**ஒரு செய்யுளில் சொற்களை அல்லது அடிகளைப் பொருள் உணர்வுக்கு ஏற்ற வகையில் நேராகவும், மாற்றியும் பொருள்கொள்ளும் முறைமையைப் பொருள்கோள் என்று வழங்குவர்.**

**1.ஆற்றுநீர்ப் பொருள்கோள்**

**2. மொழிமாற்றுப் பொருள்கோள்**

**3.நிரல்நிறைப் பொருள்கோள்**

**4.பூட்டுவிற் பொருள்கோள்**

**5. தாப்பிசைப் பொருள்கோள்**

**6. அளைமறிபாப்புப் பொருள்கோள்**

**7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்**

**8. அடிமறிமாற்றுப் பொருள்கோள்**

**1. ஆற்றுநீர்ப் பொருள்கோள்**

**ஒரு செய்யுளில், பொருளானது ஓடுகின்ற ஆற்று நீரோட்டம் போல சொற்கள் முன்பின்னாக மாறாமல், நேராகப் பொருள் கொள்ளும் வகையில் அமைவது ஆற்றுநீர்ப்பொருள்கோள் எனப்படும்.**

**(எ.கா)**

**“சொல்லரும் சூல்பசும் பாம்பின் தோற்றம்போல்**

**மெல்லவே கருஇருந்து ஈன்று மேலலார்**

**செல்வமே போல்தலை நிறுவித் தேர்ந்த**

**நூல் கல்விசேர் மாந்தரின் இறைஞ்சிக் காய்த்தவே” ( சீவகசிந்தாமணி )**

நெற்பயிர் கருவுற்ற, பச்சைப் பாம்பின் வடிவம்போல் கருக்கொண்டு, பின்பு கதிர்விட்டு, கீழ்மக்கள் செல்வம் சேர்ந்தவுடன் பணிவின்றி தலைநிமிர்ந்து நிற்பதுபோல் குத்திட்டு நின்று, முடிவில் கதிர் முற்றியவுடன் கற்றவர்கள் வணங்குதல் போல் வளைந்து காய்த்தன.

'சொல்' என்னும் எழுவாய் அதன் தொழில்களான இருந்து, ஈன்று, நிறுவி, இறைஞ்சி என்னும் வினையெச்சங்களைப் பெற்று காய்த்தவே என்னும் பயனிலையைக் கொண்டு முடியும்வரை நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைந்ததால் இது ஆற்றுநீர்ப்பொருள்கோள் ஆகும்.

"மற்றையது நோக்காது அடிதொறும் வான்பொருள்

அற்றற்று ஒழுஇமஃது யாற்றுப் புனலே" (நன்னூல்.412)

2. மொழிமாற்றுப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் அமைந்துள்ள சொற்களை ஓர் அடிக்குள்ளே மொழிமாற்றிப் பொருள் கொள்வது மொழிமாற்றுப் பொருள்கோள்' ஆகும்.

(எ.கா)

"சுரையாழ அம்மி மிதப்ப - வரையனைய

யானைக்கு நீந்து முயற்சி நிலையென்ப

கானக நாடன் சுனை "

கானக நாடன் சுனையில் சுரை ஆழும், அம்மி மிதக்கும், யானை நீந்தும், முயல் நிலையாக நிற்கும் எனச் சொற்கள் நகைப்பிற்கு இடமான பொருளைத் தருகின்றன. எனவே செய்யுளில் உள்ள சொற்களை

"சுரை மிதப்ப அம்மி அழ

யானைக்கு நிலை முயற்சி நீத்து"

என ஓரடிக்குள் இடம் மாற்றி வைத்துப் பொருள் கொள்ள வேண்டும். இவ்வாறு செய்யுளில் உள்ள சொற்களைப் பொருளுக்கேற்ற வகையில் ஓரடிக்குள் மாற்றிப் பொருள் கொள்ளும் முறைக்கு ‘மொழிமாற்றுப் பொருள்கோள்’ என்று பெயராகும்.

“ஏற்ற பொருளுக்கு இயையும் மொழிகளை

மாற்றியோர் அடியுள் வழங்கல் மொழிமாற்றே“ (நன்னூல்.413)

3.நிரல்நிறைப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் சொற்கள் முறை பிறழாமல் நிரல்நிறையாக (வரிசையாக) அமைந்து வருவது ‘நிரல்நிறைப் பொருள்கோள்’ ஆகும்.

(எ.கா)

“அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை

பண்பும் பயனும் அது“ (திருக்குறள்)

கணவனும் மனைவியுமாக இணைந்து அன்பு செய்வதே இல்வாழ்க்கையின் பண்பாகும். இருவரும் செய்யும் அறமே இல்வாழ்க்கையின் பயனாகும் என்பது இக்குறட்பாவின் கருத்து. இல்வாழ்க்கையின் பண்பும் பயனுமாவது, அன்பும் அறனும் உடையதாய் இருப்பதே ஆகும் என இரு அடிகளிலும் சொற்கள் நிரல்நிறையாக வந்துள்ளதால் இது நிரல்நிறைப் பொருள்கோள் எனப்படும். நிரல்நிறைப் பொருள்கோள் இரு வகைப்படும்.

(அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

(ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

(அ) முறை நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாயாக அமையும் பெயர்ச்சொற்களை அல்லது வினைச் சொற்களை வரிசையாக நிறுத்தி அவை ஏற்கும் பயனிலைகளையும் அவ்வரிசைப்படியே நிறுத்திப் பொருள் கொள்ளுதல் முறை நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

(எ.கா) "கொடி குவளை கொட்டை நுசுப்பு உண் கண்மேனி,"

இவ்வடியில் கொடி, குவளை, கொட்டை என்ற எழுவாய்ப் பெயர்ச் சொற்களை வரிசைப்படுத்தி அவற்றிற்குரிய பயனிலைகளாக நுகப்பு, கண், மேனி என்று வரிசைப்படுத்தி கொடி நுசுப்பு, குவளைக்கண், கொட்டைமேனி என்று பொருள் கொள்ள வேண்டும்.

இச்செய்யுளில் முறை பிறழாமல் வரிசை முறையில் சொற்கள் அமைந்து வருவது 'முறை நிரல்நிறைப் பொருள்கோள்' ஆகும்.

(ஆ) எதிர் நிரல்நிறைப் பொருள்கோள்

செய்யுளில் எழுவாய்களை வரிசைப்படுத்தி அவை ஏற்கும் பயனிலைகளை எதிர் எதிராகக் கொண்டு பொருள் கொள்ளுதல் எதிர் நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

(எ.கா)

"விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்

கற்றாரோடு ஏனை யவர்" (திருக்குறள்)

இக்குறளில் ஓர் அடியில் விலங்கு, மக்கள் என்று எழுவாய்களை வரிசைப்படுத்திவிட்டு, பயனிலைகளாக கற்றார், கல்லாதார் (ஏனையவர்) என வரிசைப்படுத்தியுள்ளனர். அதைக் சுற்றார் மக்கள் என்றும் கல்லாத ஏனையவர் விலங்குகள் என்றும் எதிர் எதிராகச் கொண்டு பொருள் கொள்ள வேண்டும். எனவே இக்குறள் எதிர்நிரல்நிறைப் பொருள்கோள் ஆகும்.

"பெயரும் வினையுமாம் சொல்லையும் பொருளையும்

வேறுநிரல் நிறீஇ முறையினும் எதிரினும்

நேரும், பொருள்கோள் நிரனிறை நெறியே“ (நன்னூல்.414)

4. பூட்டுவிற் பொருள்கோள்

வில்லின் இருமுனைகளையும் நாணால் இணைத்தல் போல ஒரு செய்யுளின் இறுதிச் சொல்லை முதற் சொல்லோடு சேர்த்துப் பொருள் கொள்ளுதல் ‘பூட்டுவிற் பொருள்கோள் ஆகும். இதனை “விற்பூட்டுப் பொருள்கோள்’ என்றும் வழங்குவர்.

(எ.கா)

“திறந்திடுமுன் தீயவை பிற்காண்டும் மாதர்

இறந்து படிற்பெரிதாம் ஏதம் - உறந்தையர் கோன்

தண்ணார மார்பன் தமிழர் பெருமானைச்

கண்ணாரக் காணக் கதவு“

இச்செய்யுளில் ‘கதவு’ என்ற இறுதிச் சொல்லைத் ‘திறந்திடுமின்’ என்ற முதல் சொல்லோடு இணைத்துப் பொருள்கொள்ள வேண்டும். இவ்வாறு வில்லில் நாண் பூட்டுவது போலச்செய்யுளின் இறுதிச்சொல்லை முதல் சொல்லோடு சேர்த்துப் பொருள் கொள்ளுதல் விற்பூட்டுப் பொருள்கோள் அல்லது பூட்டுவிற் பொருள்கோள் எனப்படும்.

“எழுவாய் இறுதி நிலைமொழி தம்முள்

பொருள்நோக் குடையது பூட்டுவில் ஆகும்“ (நன்னூல்.415)

5. தாப்பிசைப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் நடுவில் நின்ற ஒரு சொல் ஊஞ்சல் கயிறு போன்று முன்னும் பின்னும் சென்று பொருள் கொள்ளும் முறையில் அமைவது தாப்பிசைப் பொருள்கோள் எனப்படும். (தாம்பு இசை - ஊஞ்சற்கயிறு)

“ உண்ணாமை உள்ளது உயிர்நிலை ஊன்உண்ண

அண்ணாத்தல் செய்யா தளறு“ (திருக்குறள்)

ஊன் உண்ணாமையால் உயிர்க்கு இறுதியான நன்னிலை உண்டாகும். ஊன் உண்பானாகின் நரகம் அவனை வெளியே விட வாய் திறவாது. இக்குறட்பாவில் நடுவில் உள்ள ‘ஊன்’ என்ற சொல் முன்னால் சென்று ‘ஊன் உண்ணாமை உள்ளது உயிர்நிலை’ என்றும் ‘ஊன் உண்ண அண்ணாதல் செய்யாது அளறு’ என்று பின்னால் சென்றும் பொருள் கொள்ளுமாறு அமைந்துள்ளதால் இது தாப்பிசைப் பொருள்கோள்’ ஆயிற்று.

“இடைநிலை மொழியே ஏனை ஈரிடத்தும்

நடந்து பொருளை நண்ணுதல் தாப்பிசை “ (நன்னூல்.416)

6. அனைமறிபாப்புப் பொருள்கோள்

பாம்பு புற்றில் நுழையும்போது, தானே மடங்கி தலை மேலாகவும், வால் கீழாகவும் நிலை மாறுவது போல செய்யுளில் இறுதிச்சொல் அல்லது இறுதியடி கீழ்மேலாய் இடையிலும் முதலிலும் சென்று பொருள் கொள்ளுமாறு அமைவது ‘அளைமறிபாப்புப் பொருள்கோள்’ எனப்படும்.அனை - புற்று, மறி - மடங்குதல், பாப்பு - பாம்பு:

(எ.கா)

“காண்பார் கண்ணாரக் கடவுளை எப்போதும்

பூண்பார் புனிதத் தவம்“

இப்பாடலில் இறுதியிலுள்ள புனிதத் தவம் என்ற சொல் கீழ்மேலாக புனிதத் தவம் பூண்பார் எப்போதும் கடவுளைக் கண்ணாரக் காண்பார் என இயைந்து பொருள் கொள்ள வரும். இதற்கு ‘அளைமறிபாப்புப் பொருள்கோள்’ என்று பெயர்.

செய்யுள் இறுதி மொழியிடை முதலிலும்

எய்திய பொருள்கோள் அளைமறி பாப்பே (நன்னூல்.417)

7. கொண்டு கூட்டுப் பொருள்கோள்

ஒரு செய்யுளில் பல அடிகளில் சிதறிக்கிடக்கும் சொற்களைப் பொருளுக்கு ஏற்றவாறு ஒன்றோடொன்று. கூட்டிப்பொருள் கொள்வது கொண்டு கூட்டுப் பொருள்கோளாகும்.

(எ.கா)

தெங்கங்காய் போலத் திரண்டுருண்ட பைங் கூந்தல்

வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி

அஞ்சனத் தன்ன பசலை தணிவாமே

வங்கத்துச் சென்றார் வரின்"

இச்செய்யுள் அமைந்த நிலையிலேயே பொருள் கொண்டால் தேங்காய் போன்ற பைங்கூந்தல் என்றும் வெண்கோழி முட்டை உடைத்தன்ன மாமேனி என்றும் அஞ்சனத் தன்ன பசலை என்றும் அமைந்து பொருள் மாறுபடும்.

எனவே இச்செய்யுளை வங்கத்துச் சென்றார் வரின் அஞ்சனத்தன்ன பைங்கூந்தல் உடையவரின் மாமேனி மேல் தெங்கங்காய் போலத் திரண்டு உருண்ட வெண்மையான கோழிமுட்டை உடைத்தன்ன பசலை தணிவாமே' எனச் சொற்களைத் தக்கவாறு கொண்டு கூட்டிப் பொருள் கொள்ள வேண்டும். எனவே இது கொண்டு கூட்டுப் பொருள்கோள் எனப்படும்.

"யாப்படி பலவினுங் கோப்புடை மொழிகளை

ஏற்புழி இசைப்பது கொண்டு கூட்டே" (நன்னூல்.418)

குறிப்பு:

மொழிமாற்றுப் பொருள்கோளில் ஓரடிக்குள்ளேயே சொற்களை மாற்றியமைத்துப் பொருள் கொள்ள வேண்டும். ஆனால் கொண்டு கூட்டுப் பொருள்கோளில் பல அடிகளில் உள்ள சொற்களைப் பொருளுக்கேற்ப மாற்றிப் பொருள் கொள்ளலாம்.

8.அடிமறி மாற்றுப் பொருள்கோள்

இது இருவகைப்படும்.

(அ).ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்று

(ஆ).பொருளிசை மாறா அடிமறிமாற்று

(அ) ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்று

ஒரு செய்யுளின் அடிகளைப் பொருளுக்கு ஏற்றவாறு எடுத்துக் கூட்டிப் பொருள் காண்பது 'ஏற்புழிக் கூட்டும் அடிமறி மாற்றுப் பொருள்கோள்' ஆகும்.

"நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் துடையார்

கொடுத்துத்தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்

மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்

விடுக்கும் வினையுலந்தக் கால்"

இச்செய்யுள் அடிகள் அமைந்துள்ள முறையில் பொருள் கொண்டால் பொருத்தமின்றி பொருட்சிதைவு ஏற்படும். எனவே,

"கொடுத்துத் தான் துய்ப்பினும் ஈண்டுங்கால் ஈண்டும்

விடுக்கும் வினையுலந்தக் கால்

மிடுக்குற்றுப் பற்றினும் நில்லாது செல்வம்

நடுக்குற்றுத் தற்சேர்ந்தார் துன்பம் உடையார்"

எனப் பொருளுக்கேற்றவாறு எடுத்துப் பொருள் கூட்டினால் பொருள் விளங்கும். செல்வம் பிறருக்குக் கொடுத்துத் தாமும் துய்த்தாலும் வளருங்காலத்தே வளரும். நல்வினை முடிந்துவிட்டால் நம்மை விட்டு நீங்கும். வலிந்து பற்றினாலும் நிற்காது போய்விடும். இவ்வியல்புகளை அறியாதவர் நடுக்கம் கொண்டு தம்மைச் சார்ந்தவரின் துன்பத்தைப் போக்காதவராய் இருக்கின்றார்கள்.

(ஆ) பொருளிசை மாறா அடிமறி மாற்று

ஒரு செய்யுளின் அடியை எங்கே மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் இசையும் மாறாமல் இருப்பது பொருளிசை மாறா அடிமறி மாற்றுப் பொருள்கோள் ஆகும்.

(எ.கா)

சூரல் பம்பிய சிறுகான் யாறே

சூரர மகளிர் ஆரணங் கினரே

வாரலை எனினே யானஞ் சுவலே

சாரல் நாட நீவர லாறே"

இப்பாடலின் எந்த அடியை எங்கு மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருள் உணர்வு குன்றாது. ஓசையும் நயமும் சிதையாது. இவ்வாறு ஒரு பாடலின் அடியை எங்கே மாற்றிப் பொருள் கொண்டாலும் பொருளும் ஓசையும் வேறுபடாமல் இருப்பதை அடிமறிமாற்றுப் பொருள்கோள் என்பர்.

"ஏற்புழி எடுத்துடன் கூட்டுறும் அடியவும்

1. பிழையின்றி எழுத வலியுறுத்துவது வழா நிலை ஆகும்.
2. குயில் கத்தும் என்பது மரபுப் பிழை.
3. செல்வி வந்தான் என்பது கால வழு.
4. தேர்வு எழுதும்போதே யான் வென்றேன் என்பது வழு அமைதி.
5. மட மட என்பது அடுக்குத் தொடர்.
6. பாம்பு, பாம்பு என்பது அடுக்குத் தொடர்.
7. தெரிந்து கொண்டே கேட்பது ஐய வினா ஆகும்.
8. கொடுப்பதற்காகக் கேட்பது கொளல் வினா ஆகும்.
9. நேரடியாக விடை கூறுவது நேர்விடை ஆகும்.

வினாக்கள்

1. இலக்கணத்தில் பிழையைக் குறிக்கும் சொல் எது?
2. இலக்கணத்தில் வழு வகைகள் எத்தனை?
3. வாழ்க ! வாழ்க ! என்பதன் இலக்கணக் குறிப்பு யாது?
4. வினா வகைகள்?
5. விடை வகைகள்?
6. வழுஅமைதி என்றால் என்ன?
7. காலங்கள் முரண்பாடாக அமையும் தொடரை எவ்வாறு அழைப்பர்?
8. ஆயிரம் மக்கள் போரிட்டனர் என்னும் தொடரில் மக்கள் என்பது யாரைக் குறிக்கும்?